1992 பிப்ரவரி 7]

91—

திப்பரமலையிலிருந்து கிளைக்கால்வாய் வெட்டுதல்

*1805 திரு. கு. லாரன்ஸ் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கல்குளம் தாலுக்காவில் கப்பியறை வருவாய் கிராம விவசாயத்திற்கும் குடிதண்ணீருக்கும் பட்டணங்கால் கால்வாயில் திப்பரமலையிலிருந்து கிளைக் கால்வாய் வெட்டி தண்ணீர் கொண்டுவருவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் அரசு இருந்த காலக் கட்டத்தில் பட்டணங்கால் திட்டம் நிறைவேற்றப்பட்டது. அன்று கிள்ளியூர் பகுதியிலே காட்டிய ஆர்வம் கருங்கல் பகுதியினுடைய வடக்கு பகுதியான கப்பியறை பகுதியிலே என்ன காரணத்தினாலோ காட்டாமல் விட்டு விட்டார்கள். ஆகவே, கப்பியறை டிஸ்டிரிப்பியூட்டரி என்று சொல்லப்படுகிற அந்தப் பகுதி முழுக்க முழுக்க விவசாயத்தையே நம்பியிருக்கிற பகுதி. விவசாய பெருங்குடி மக்கள் வாழ்கிற ஒரு பகுதி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன சொன்னாலும் கூட, திராவிட இயக்கத்தினுடைய வரலாற்றில், நம்முடைய இதய தெய்வத்திற்காக வாழ்ந்து கொண்டிருக்கிற அந்தப் பகுதி வாழ் மக்கள் கண்டிப்பாக இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று சிந்தனையோடு இருக்கிறார்கள். அது மிகக் குறுகிய ஒரு சேனல் 1.90 அடி அளவு நீளம் பொருந்திய, 2 அடி அல்லது 3 அடி அகலத்தில் செய்கிற ஒரு சாதாரணமான சேனல். எனவே, அதை வெட்டி அந்தப் பகுதி வாழ் மக்களை காப்பாற்ற வேண்டுமென்று வேண்டுவதோடு அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம் வட்டத்தில் பட்டணங்கால்வாயில் திப்பிரமலையிலிருந்து கப்பியறை கிராமத்திற்கு கிளைக்கால்வாய் வெட்டுவதற்கு நிலம் கையகப்படுத்துவதற்காக மூனைந்தபோது அங்கே வீடுகள் தோப்

புகள் நிலங்கள் இருக்கிற காரணத்தாலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டப் பெற்றது. ஏறக்குறைய 45 அடி அகலமும் 30 அடி ஆழமும் வைத்து கால்வாய் அமைக்க வேண்டியிருக்கிறது. மேலும், அந்த திட்டம் பொருளாதார அடிப்படையிலே சாத்தியக் கூறுகள் இல்லை என்பதாலும், இந்த திட்டத்தினுடைய அடிப்படை, நம்முடைய பொதுப் பணித்துறையினுடைய நார்ம்ஸ் என்று சொல்லப்படுகிற அளவுகளுக்கு உட்பட்டு வராததாலும், இந்தத் திட்டம் தற்போது எடுத்து செயல்படுத்துவதற்கு வழி இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. லாரன்ஸ். கேள்வியாகக் கேட்க வேண்டும். விளக்கம் அளிக்கக் கூடாது.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986இல் கண்காணிப்பு பொறியாளர்கள் இது குறித்து இசைவு தரும் நிலையில் உள்ளது என்று தெரிவித்திருந்தார்கள். அரசுக்கு இன்றைக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறதோ அதற்கு பன்மடங்கு அதிகமாக கோடிக்கணக்கான ரூபாய் நட்டத்தை அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகள் இதுகாறும் பெற்று வந்திருக்கிறார்கள் என்பதை நான் நினைவு கூற கடமைப்பட்டிருக்கிறேன். அத்தோடு அந்தப் பகுதியில் 19 குளங்கள் இருக்கின்றன.....(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வி கேட்கும் போது கேள்வியாகத்தான் கேட்க வேண்டும். நீங்கள் இரண்டாவது கேள்வி கேட்கிறீர்கள். அப்பொழுதும் விளக்கம் எல்லாம் சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள். அங்கு எத்தனை குளம் இருக்கிறது என்ற விவரங்கள் எல்லாம் அமைச்சரிடமே இருக்கும். கேள்வியாகக் கேளுங்கள்.

மு்றபகல் 10–15

திரு. கு. லாரன்ஸ் : எனவே இந்த பட்டணங்கால் சானல் என்று சொல்வதே பல்வேறு கிராமங்களில் 100 அடி ஆழத்திற்கும் ஆசியாவிலே உயர்ந்த மலைகளைக் குடைந்து செல்லுகின்ற ஒரு சானலாக இந்த சானல் செல்லுகிறது. எனவே, இந்தப் பகுதியைப் பொருத்தவரையில் 45 அடி என்று சொல்வது ஒரு சாதாரணமான காரியம். எனவே, வரும் ஆண்டிலாவது இதை ஆய்வு செய்து இந்தப் பகுதிவாழ் மக்களுக்கு போதிய வசதி செய்கின்ற பணியை மேற்கொள்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பொதுப் பணித் துறையின் மூலம் போடுகின்ற திட்டங்கள் அந்த பெனிபிட் காஸ்ட் ரேஷியோ என்ற

அடிப்படையிலே சில இடங்களிலே செயல்படுத்துகின்றோம், சில இடங்களிலே அவசியத்தின் தேவையைக் கருதி முக்கியத் துவத்தை உணர்ந்து, சில திட்டங்களிலே குறைவாக இருந்தாலும் கூட நம்முடைய ஒப்பற்றத் தலைவி டாக்டர் முதல்வர் இன் றைக்கு சில திட்டங்களையெல்லாம் எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தை பொருத்த வரையில் பாசனப் பகுதியைப் பெறுகின்ற நிலங்கள் மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தினால்தான் இந்தத் திட்டத்தி னுடைய சாத்தியக்கூறு இல்லை என்பதை நான் தெரிவித் தேன். இருப்பினும் மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டு கோளை ஏற்று இந்தத் திட்டத்தினுடைய அளவுகோல்களையும் மற்றும் அதனுடைய விகிதாச்சாரங்களையும் மறுபரிசீலனை செய்வதற்கு இந்த அரசு எடுத்துக் கொள்ளும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தே. குமார தாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே திப்பிரமலையிலிருந்து செல்லுகின்ற இந்த கிளைச் சானல் வெட்டப்பட வேண்டுமென்று நான் இதற்கு முன் சட்ட மன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில் கேட்டு, அதாவது அமைச் சர் அவர்கள் சொன்னது போல, 1986இல் அந்தப் பணி செய்யப் படும் என்கிற உத்திரவாதம் எனக்கு கிடைக்கப்பெற்றது. அதற் கிடையில் ஆட்சி மாறிய காரணத்தால் அது முடியாமல் போய் விட்டது. அதைத் தொடர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிற நேரத்தில், அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற நேரத்தில் தோட்டம், வீடுகள் இருக்கின்ற காரணத்தாலே, அந்த இடங்களை கைவசப்படுத்துவதற்கு சிரமங்கள் இருக்கின்றன என்று சொன் னார்கள். நீங்கள் அப்படிப்பட்ட பணியை ஆரம்பிக்கின்றபோது எந்தத் தடங்கல் வந்தாலும் இதில் அரசியல் ஈடுபாடு இல்லா மல் நாங்கள் பொது மக்களின் நலன் கருதி உங்களுக்கு வேண்டிய எல்லாவிதமான ஒத்துழைப்புத் தரத் தயாராக இருக்கிறோம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தருவீர்களா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, 1986க்குப் பிறகு நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சட்டமன்ற உறுப் பினராக இடையிலே இருந்திருக்கின்றார்கள். அப்போதும் கூட அவர் பெற்று இருக்கலாம். ஏனோ விட்டுவிட்டார்கள். இருந் தாலும் நான் ஏற்கெனவே சொன்னது போல நம்முடைய ஒப் பற்றத் தலைவியின் ஆட்சியில் இது சம்பந்தமான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.